***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 178/2019 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | அப்துல் மஜித் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 29.05.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி மைதீன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து தெருவில் குடியிருந்து வருகிறார். அசா.1 அப்துல் மன்னான் எனது இரண்டாவது மகன். அசா.2 முகமது சாலிக் எனது மூன்றாவது மகன். 20.03.2016 ம் தேதி சம்பவம் நடந்தது. 21.03.2016 ம் தேதி நான் வேலைக்கு போயிவிட்டு வந்தேன். வீட்டின் பக்கத்தில் கூடி இருந்தவர்கள் எனது பையனை முகமது அலி என்பவரின் மகன் மைதீன் அடித்து விட்டதாக என்னிடம் கூறினார்கள். மேலும் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சேர்த்து உள்ளதாகவும் என்னிடம் கூறினார்கள். நான் மருத்துவமனை சென்று என் மகனை பார்த்தேன். அங்கு போலிசார் வந்தார்கள். புகார் எழுதி கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இது சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரித்தார்கள். எனது மகனை மேல்சிகிச்சைக்காக நான் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அசா.3 ஐ குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு வழங்கபட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 178/2019 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | முகமது சாலிக் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 29.05.2025.

முதல் விசாரணை

நான் தற்போது கடையநல்லுரில் குடியிருந்து வருகிறேன். நான் கறிகடையில் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி மைதீன் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது தெருவுக்கு முந்திய தெருவில் குடியிருந்து வருகிறார். அசா.1 அப்துல் மன்னான் எனது உடன் பிறந்த சகோதரர். 20.03.2016 அன்று எதிரி மைதீன் வீட்டின் பக்கத்தில் நான் சிகரெட் பிடித்து கொண்டிருந்தேன். என்னோட சின்ன பையன் நீ என் முன்னாடியே சிகரெட் அடிப்பியா என்று தேவுடியா மகனே, கூதி மகனே என்று கெட்ட வார்த்தையால் என்னை ஏசினார். எனது அண்ணன் அப்துல் மன்னானிடம் சொன்னேன். மறுநாள் 21.03.2016 அன்று மதியம் 01.30 மணிக்கு எதிரி தெருவில் சென்று அப்துல் மன்னான் கேட்க சென்றார். என் தம்பி என்ன யோக்கியமா என்று கீழே கிடந்த கடப்பாகல்லை எடுத்து எனது அண்ணனின் தலையில் இடது பக்கத்தில் அடித்தார். எதிரி என் அண்ணனை பார்த்து உன்னை வெட்டி விடுவேன் என்று கொலை

மிரட்டல் விடுத்தார். அதன் பிறகு காயம்பட்ட எனது அண்ணனை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அசா.2 ஐ குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு வழங்கபட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 178/2019 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | அப்துல் மன்னார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 29.05.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். எதிரி மைதீன் என்பவரை எனக்கு தெரியும். பக்கத்து தெருக்காரர். 20.03.2016 ம் தேதி எனது தம்பியை எதிரி கூதிமவனே, தேவுடியா மவனே என்று திட்டியதாக என் தம்பி என்னிடம் கூறினார். 21.03.2016 மதியம் 01.30 மணிக்கு நான் எதிரி வீட்டில் சென்று என் தம்பியை எதற்காக திட்டினீர்கள் என்று கேட்க சென்றேன். அதற்கு அவர் என்னையும் கூதிமவனே, தேவுடியா மவனே என்று கெட்ட வார்த்தையால் எதிரி திட்டி உடைந்த கடைப்பாகல்லை எடுத்து எனது தலையின் இடது பக்கத்திலும், நடு நெற்றியிலும் அடித்து திரும்வும் என் வீட்டு பக்கம் வந்தால் வெட்டி விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தான். இரத்தம் எனக்கு அதிகமாக வந்தததால் என் தம்பி முகமது சாலிக் என்னை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு இருந்து போலிசாரிடம் தகவல் சொல்லி

கையொப்பம் போட்டு கொடுத்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேற்சிகிச்சைக்கு சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எதிரி என்னை அசிங்கமாக பேசியதால் அந்த இடத்தில் எனக்கு ரொம்ப கேலமாக இருந்தது. எதிரி என்னை தலையில் அடித்தால் இன்று வரை எனக்கு தலைசுற்று வருகிறது, அதனால் நான் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்து வருகிறேன். எதிரி என்னை கொலைமிரட்டல் விடுத்தால் எனக்கு பயமாக இருந்தது இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அசா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு வழங்கபட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi